என்னும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்' தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 22-8-1996 காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

44. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (ஐந்தாவது திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1995) செயலுக்கு வரும் நாளினைக் குறிப்பிடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 29-3-1996-ஆம் நாளிட்ட 141-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

45. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும் (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

90. கோரிக்கை எண். 32 — வீட்டு வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1996-97. (தமிழ், ஆங்கிலம்).

91. கோரிக்கை எண். 33 — நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1996-97. (தமிழ், ஆங்கிலம்).

*92. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

---

* 20-8-1996 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.